அசல் வழக்கு எண். 24/2015

03.10.2019

வா.சா.1 திரு.சுப்பிரமணியன் என்பவர் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

எனக்கும் 1 வது பிரதி வாதியின் கணவர் ராஜமாணிக்கத்திற்கும் இடையே சுமார் 20 வருடங்களாக பழக்கம் உண்டு. மேற்படி ராஜமாணிக்கம் என்பவர் என்னிடம் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் அவருக்கு பலமுறை கைமாத்தாக பணம் கடனாக கொடுத்து உதவி செய்துள்ளேன். அவ்வாறு பலமுறை நான் அவருக்கு கைமாத்தாக கொடுத்த மொத்த கடன் தொகை சுமார் ரூ. 8,00,000/- இருக்கும். எத்தனை முறை அவ்வாறு என்னிடம் கைமாத்தாக பணம் கடன் வாங்கினார் என்று ஞாபகமில்லை. கடைசியாக அவர் என்னிடம் ரூ 1,00,000/- கடன் பெற்றார். மற்ற சமயங்களில் என்னிடமிருந்து ரூ.10,000/- அல்லது ரூ20,000/- என்ற அளவில் பல்வேறு தேதிகளில் கடன் வாங்கினார். சுமார் 5 வருடங்களாக அவ்வாறு பல்வேறு தேதிகளில் என்னிடம் கைமாத்தாக கடன் வாங்கியுள்ளார். அவ்வாறு கைமாத்தாக கடன் வாங்கிய தொகைகள் குறித்து நான் குறிப்பு எதுவும் எழுதிவைக்கவில்லை. நான் நாகப்பட்டினத்தில் நாணயக்காரத்தெருவில் அம்பிகா ஜ ுவல்லரி என்ற பெயரில் தங்க நகை வியாபாரம் செய்துவருகிறேன். நான் பழைய நகைகளை வாங்குவதும் உண்டு. தற்போது என்னிடம் காட்டப்படும் அம்பிகா ஜ ுவல்லரி என்ற அச்சடிக்கப்பட்டுள்ள ஒரு மெமோவில் 08.09.2012என்ற தேதியில் நான் பழைய நகையை வாங்கியதற்கான குறிப்புகள் எழுதி அதில் நான் கையெழுத்திட்டுள்ளேன். அந்த மெமோ பி.வா. சா. ஆ 1 ஆகும். (இந்த ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று கூறி இது குறியீடு செய்யப்படுவதற்கு வாதி தரப்பு வழக்றிஞர் ஆட்சேபணை செய்தார். அவரது ஆட்சேபணைக்கு உட்பட்டு அந்த ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.) ஆனால் அந்த மெமோ எந்த நபருக்கு வழங்கப்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது. மேற்படி ராஜமாணிக்கம் என்பவர் என்னிடம் பழைய நகை விற்றது கிடையாது. எனவே அந்த மெமோ ராஜமாணிக்கம் என்பவருக்கு நான் வழங்கியது அல்ல. வேறுயாருக்கோ வழங்கப்பட்டது. யாருக்கு வழங்கப்பட்டது என்று தற்போது ஞாபகமில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் ஒரு நோட் புக் தாளில் தேதிகள் மற்றும் தொகைகள் என்னால் எழுதப்படவில்லை. மேற்படி ஆவணத்தை பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் குறியீடு செய்ய முற்பட்டபோது அந்த ஆவணத்தை பரிசீலணை செய்ததில் அந்த ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் என்ன தொடர்பு உள்ளது என்பது பற்றி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரிடம் கேட்டபோது அதில் உள்ள விவரங்கள் வாதியால் எழுதப்பட்டது என்று கூறினார். ஆனால் அதற்கும் இந்த வழக்கிற்கும் உள்ள தொடர்பு பற்றி அவர் எதுவும் கூறவில்லை. எனவே அந்த ஆவணத்தை குறுக்கு விசாரணையின் போது குறியீடு செய்ய அனுமதிக்க இயலாது. சட்டத்துக்கு உட்பட்டு பிரதிவாதி தரப்பு விசாரணையின்

போது தேவைப்பட்டால் குறியீடு செய்துகொள்ளலாம். எனவே சாட்சியத்தின் மாதிரி எழுத்துக்கள் எதுவும் பெறவேண்டிய அவசியமில்லை. இது தொடர்பான பிரதி வாதி தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

வா.சா. ஆ. 1 கிரய ஒப்பந்த பத்திரத்தை பிரதிவாதிகள் எழுதி தயாரித்து எடுத்துவந்து என்னிடம் காட்டினார்கள். அந்த கிரய ஒப்பந்த பத்திரம் எழுதுவதற்கு முன்பு நானும், ராஜமாணிக்கமும் அது சம்மந்தமாக கலந்து பேசினோம். வா.சா.ஆ.1 எழுதப்பட்ட தேதிக்கு எவ்வளவு நாட்கள் முன்பு அவ்வாறு ராஜமாணிக்கத்தோடு நான் கலந்து பேசினேன் என்று ஞாபகமில்லை. நானும் ராஜமாணிக்கமும் கலந்து பேசியபோது ராஜமாணிக்கம் ரூ. 8,00,000/- கடன் தொகையை நான்கு வருடத்திற்குள் எனக்கு திருப்பி செலுத்திவிடுவதாகவும், அதுவரையில் வட்டி ரூ.6,00,000/- கணக்கிட்டு மொத்தம் ரூ 14,00,000/- கொடுத்துவிடுவதாகவும், தவறினால் தாவா சொத்தின் மார்கெட் மதிப்பில் மேற்படி தொகை ரூ .14,00,000/- கழித்து கொண்டு மீததொகையை என்னிடம் இருந்து பெற்றுக்கொண்டு தாவா சொத்தை எனக்கு கிரயம் செய்துகொடுப்பதாக ஒப்பு கொண்டு வா. சா.ஆ.1 கிரய ஒப்பந்த பத்திரம் அவருடைய மனைவி 1 வது பிரதிவாதி எழுதிகொடுத்தார். வா.சா. ஆ.1 கிரய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டது பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. ராஜமாணிக்கம் என்பவர் என்னிடம் வாங்கிய கடனுக்காக தாவா சொத்து ராஜமாணிக்கம் என்பவரது மனைவியான 1 வது பிரதிவாதியின் கையெழுத்தை வெற்று முத்திரை தாளில் ஜாமினுக்காக வாங்கி வைத்திருந்தேன் என்பதும், பின்னிட்டு நான் அதை கிரய உடன்படிக்கை பத்திரமாக எழுதி தயாரித்துக்கொண்டேன் என்பதும் சரியல்ல. காலவரையறை சட்டத்தினால் பாதிக்காமல் இருப்பதற்காக நான்கு வருட காலக்கெடு நிர்ணயித்து நானே வாசகங்களை ஜோடித்து எழுதிகொண்டேன் என்றால் சரியல்ல. அதேபோல் இதர வாசகங்களையும் என் விருப்பத்திற்கு ஏற்றவாறு அதிக லாபம் அடையும் நோக்கத்தோடு எழுதி தயாரித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. எனவே நான் கோரியுள்ள ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் பிரதிவாதிகளுக்கு எதிராக கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மாற்று பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இன்றிலிருந்து சுமார் 7 அல்லது 8 வருடங்களுக்கு முன்பு தாவா சொத்தின் மதிப்பு ரூ 30,00,000/- பெறும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் தற்போதைய மார்க்கெட் மதிப்பு எனக்கு தெரியாது. என்னுடைய வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையோடு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. கடந்த 7, 8 வருடங்களாக ராஜமாணிக்கத்திற்கும் எனக்கும் பேச்சுவார்த்தை கிடையாது. அதற்கு முன்பு நான் ராஜமாணிக்கத்துடன் பேச்சுவார்த்தையில் இருந்தபோது அவருடைய வீட்டிற்கு போவது வழக்கம். அந்த சமயத்திலேயே 1வது பிரதிவாதி உடல்நலம் பாதிக்கப்பட்டு இருந்தார். 1வது பிரதிவாதி அந்த சமயத்தில் நல்ல உடல் நிலையில்தான் இருந்தார் என்பதும், இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்பதும் சரியல்ல.